# வஜஹர்ருதம்

ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா

# வஜனாம்ருதம்

பாகம் I, II

★ சுவாமி கெங்காதரானந்தா ★

சிவயோக சமாஜம்
பெருந்தெரு
திருகோணமலை
இலங்கை

ஆகஸ்டு 1988

ஃ ஃ ஃ

அச்சிட்டோர் :

குமரன் அச்சகம்,
201, டாம் வீதி,
கொழும்பு-12.



ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா
அவர்கள்

# முன்னுரை

அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்த பரம்பொருளின் திருவருளால் ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாஜி அவர்களின் 214 அருள் வாக்குகள் கொண்ட "வஜனாம்ருதம்" 1978 ஆம் ஆண்டில் சிவயோக சமாஜ சத்சங்கத்தினர் வெளியீடாக எமக்குக் கிடைத்தது.

அதன் பின்னர் 1984 ஆம் ஆண்டு வெளிவந்த "ஞான மண்டலம்" என்னும் நூலில் 41 அருள் வாக்குகள் சேர்க்கப்பட்டுள்ளன.

இவை இரண்டினையும் சேர்த்து ஒரே நூலாக்கி வழங்கத் திருவருள் கைகூடியது. வாழ்க்கைப் பாதையில் வழுக்கிவிழும் போதும் எமக்கு ஊன்றுகோலாய் உதவிய இந்த அமிர்த வசனங்கள் யாவருக்கும் உதவவேண்டும். யாம் பெற்ற செல்வம் பெறுக இவ் வையகம்.

அஸதோ மா ஸத்கமய
தமஸோ மா ஜ்யோதிர்கமய
மருத்யோர் மா அம்ருதம்கமய

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

கொழும்பு
8. 7. 1988.

சிவயோக சமாஜ அன்பர்

# பொருளடக்கம்


| | | | | |
|---|---|---|---|---|
| பாகம் I | ... | ... | ... | 1 |
| பாகம் II | ... | ... | ... | 35 |

இறைவன் என்பது மத விசுவாசிகளால் உருவாக்கப்பட்ட ஒரு கற்பனைப் பொருளன்று, மன உணர்வுகளுக்கு அப்பால் சென்றவர்களால், நன்றாக உணர்ந்து அனுபவிக்கக்கூடிய ஒரு சம்பூர்ண சத்தியம். அப்பியாசத்தினாலும், ஆராய்வினாலும் அதைத் தெள்ளத் தெளிவாக அறிகின்றவர்கள் இன்னல் அகன்று நிலையான சுகத்தை அடைகின்றனர்.

ஹிந்து மதம் ஒரு தனிப் ப்ரவாசகனால் உண்டாக்கப்பட்டதல்ல. அதை மதம் என்று சொல்வதைவிடச் சனாதன தர்மம் என்று கூறுவதுதான் பொருத்தமுடையதாயிருக்கின்றது. ஆகையால் அது ஜாதி மதங்களைக் கடந்து நிற்கின்றது. சனாதன தர்மத்தைக் கடைப்பிடித்து ஒழுகுகின்றவர்கள் யாராயிருந்தாலும் சரி அவர்கள் அனைவரும் ஹிந்துக்கள்.

1. உனது வாழ்வில் நிரந்தரமான சுகத்துடன் நிம்மதியாக வாழ முடியுமா? என்ற விஷயத்தில் எள்ளளவும் சந்தேகப்படாதே. கருகிய கரி நெருப்புடன் சம்பந்தப்படும் பொழுது அதன் இயற்கையான கருமை மாறி ஒளிர்கின்றது. அதே போன்று உனது மனம் தெய்வீக ஒளியில் கலந்திருந்தால் ஜீவசுகம் நிறைந்த சம்பூரண மனிதனை உன்னில் காணலாம்.

2. கறள் ஏறிய இரும்பைக் காந்தம் ஈர்க்காதது போன்று அழுக்கு நிறைந்த மனதைத் தெய்வீக ஒளி கவர்ந்தெடுப்பதில்லை.

3. உனது இதயத்தைத் தூய்மைப் படுத்துக. அப்பொழுது சிந்தனை சக்தியும், செயலாற்றும் திறமையும் அற்புதகரமான ரீதியில் பெருகும்.

4. நீ தெய்வத்தைப் பார்க்கவில்லையென்றாலும் தெய்வம் உன்னைப் பார்க்கின்றது.

5. கண்கள் உலகத்தைப் பார்க்கும் சக்தி இழந்தாலும், தெய்வத்தைப் பார்க்கும் சக்தியை இழப்பதில்லை.

6. உனது சிறு செயலிலும் சிற்றறிவிலும் கூட பேராற்றலும் பேரறிவும் மறைந்திருக்கிறது. அதை உணரக் கூடிய அளவிற்கு இதயத்தைப் புனிதப்படுத்துக.

7. தார்மீக வழியில் தேடிய பணம் அவ்வழியில் செலவழிந்தால் பாபங்கள் தேய்ந்துவிடும்.

8. உன் மனக்குற்றம் மற்றவர்களின் குற்றமாகத் தோற்றமளிக்கிறது.

9. அழுக்காறு நீங்கியபின் செய்யுந் தொண்டு தான் தொண்டு.

10. குறுகிய மனமுடையவனின் பக்தி நஞ்சு கலந்த அமிர்தம் போன்றது.

11. தன்னைத்தான் அளந்து பார்க்கத் தெரியாதவன் மற்றவர்களை அளந்து பார்ப்பது எங்ஙனம்?

12. உலோபியின் செல்வம் பாம்புப் புற்றிலிருக்குந் தேன் போன்றது.

13. நல்லதாயினும் அது நல்லோர்களிடத்திலிருந்து வரவேண்டும்.

14. கர்மரகசியம் தெரிந்தவனுக்கு வாழ்க்கை விளையாட்டரங்கம் போன்றது.

15. சேர்ந்து வாழ்ந்தாலும் நீரிற் கலந்த எண்ணெயைப்போல் வாழ்.

16. உன்னை உன்வசப்படுத்தினால், மற்றவர்கள் உன் வசப்படுவார்கள்.

17. உண்மை இருக்கும் இடத்தில் அழகும், இளமையும் பொழியும்.

18. அடிமைகள் வாழ்ந்தாலும், நலன் பெறுவதற்கு ஒன்றுமேயில்லை.

19. மரணபயம் இருக்கின்றவன் விடுதலையின் உயர்ந்த சுகத்தை அறிவதில்லை.

20. அரிய சந்தர்ப்பங்கள் பலதும் உன் எதிரில் நிற்கின்றன. குழைத்து ஊட்டும்போது உண்ண மறுக்கும் குழந்தையைப்போல், சந்தர்ப்பத்தை உணர்ந்து செயற்படுத்தத் தெரியாதவர்கள், துன்பத்திலிருந்து மீளுவதில்லை.

21. காலத்தைப் பிரயோசனப்படுத்தத் தெரியாதவர்களுக்குக் காலமும், காலனும் ஒன்றே.

22. உபயோகமுறை தெரிந்தால் நஞ்சும் அமுதமாகும்.

23. உரிமை இல்லாத இடத்தில் உரித்துடன் பேசி விரோதிகளைத் தேடாதே.

24. மனிதா! உனது மெய்யன்பை உணர்ந்து ஏற்றுக்கொள்ளும் வகையில், இவ்வுலகம் இல்லை. அதை உணர்ந்து அன்புடன் அரவணைக்கும் இறைவனிடம் அன்பு செலுத்தினால், வஞ்சனை இல்லாத பேரன்பில் மூழ்கி வாழலாம.

25. மனச்சாந்தியை இழந்தவர்கள், தன்னையும் உலகத்தையும் வெறுக்கின்றனர். அன்றியும் தான் கொண்டதுதான் சரி என்ற ஆபத்தான பிடிவாத குணமுடையவராயும் இருப்பர். எனவே தனக்கும் சமுதாயத்திற்கும் உபத்திரவம் இல்லாது வாழ மனச் சாந்தியை வளர்த்தெடுக்க வேண்டும்.

26. மனித வாழ்க்கை அருவருக்கத் தக்க நிலைக்குத் தாழ்ந்துவிடும் பொழுதும், சமுதாயப் பண்புகள் நஷ்டப்படும் பொழுதும் இவ்வுல கில் மனிதனாகப் பிறப்பதற்குரிய சந்தர்ப்பம் கிடைத்த நன்றிக்கடனுக்காவது நாம் மேலான வாழ்வு வாழக் கடமைப்பட்டிருக் கிறோம். இதை உணராமல் செய்யுஞ் செயல் எல்லாம் தன்னைத்தான் வஞ்சிப்பதாகும்.

27. தங்கள் தங்களுடைய தேசிய கலை, கலா சாரத்திற்குத் தனி மதிப்பளிக்கும் ஒரு அரசி யலமைப்புக்கு மாத்திரந்தான் ஆதரவளிக்க வேண்டும். ஏன்?... இதில்தான் எங்களுடைய முழுச் சுதந்திரமும் தங்கியிருக்கின்றது.

28. காலமெல்லாம் பாலூட்டி வளர்த்த பாம்பும் ஒருநாள் ஊட்டிய கரத்தில் கொத்தும் அவ் விதமே செய் நன்றி மறந்த மனிதனும்.

29. சான்றோர்கள் மனம் புண்பட நடந்தால் தீர்த்தால் தீராத பிரம்ம சாபம் உன்னை விட்டு அகலாது.

30. உன் குற்றம் மற்றவர் குற்றமாவதில்லை. குற் றத்தை உணர்ந்தால் திருத்துவதும், திருந்து வதும் எளிது.

31. நம்பினாலும் நம்பாவிட்டாலும் சரி, தெய்வம் உன்னைக் கணப்பொழுதிலும் கைவிடுவதில்லை. உயிர்த்துடிப்பின் ஆதார சக்தி தெய்வமாய் இருக்கும்பொழுது அது கைவிட்டால் நீ வாழ்வது எங்ஙனம்?

32. அழிய வேண்டியது அழியும் பொழுது அதனைப் பார்த்துத் துயரம் கொள்ளாதே.

33. புயல் சமுத்திரத்தில் கொந்தளிப்பை உண்டு பண்ணினாலும் சமுத்திரம் சமுத்திரமாகவே இருப்பது போன்று பக்தவம் அடைந்தவர்களுடைய மனமும், வாழ்க்கையும் உலக விகாரத்தினால் கொந்தளிப்பதில்லை.

34. புனித யாத்திரைகள், ஆலய தரிசனம் போன்றவைகளை இறைவனோடு இணையும் முறையில், திரிகரண சுத்தியுடன் சிறுமைக் குணங்களை நீக்கிச் செய். அழுக்காறுகள் நீங்கும்வண்ணம் அது புனிதமாய் இருக்கட்டும்.

35. அந்தரங்க சுத்தி இல்லாத நாம ஜெபம் தியானம் போன்றவைகள் எள்ளளவிலும் பயன் அளிப்பதில்லை. அது வெறும் நாடகமாயும், தன்னையும் மற்றவர்களையும் ஆத்ம வஞ்சனைக்கு உட்படுத்தும் ஒரு தந்திரமாகவும் மாறலாம்.

36. நல்லொழுக்கக் குறைவால் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் துயரம், கடவுளே! கடவுளே! என்று சொல்லிக்கொண்டிருப்பதால் மட்டும் தீர்ந்துவிடாது. நற்செயலால் மனதைப் பரிசுத்தப்படுத்தும் பொழுது எல்லாம் சுகமாய் முடியும்.

37. பசி தாகமில்லாத இறைவனுக்கு வேளா வேளைக்கு நீரும், உணவும் அளிக்கிறீர்கள். தூணிலும் துரும்பிலும் குடியிருக்கத் தகுதி யுடையவனுக்குத் தனித்ததோர் இடவசதியும் செய்து கொடுக்கிறீர்கள். உங்களுடைய அதே உணர்வும், செயலும் மனிதனைகப் பிறந்தும், மனித உரிமையற்று நிர்க்கதியாய் ஊர்ந்து செல்லும் மனித உருவங்களுக்கு அளிக்கப்படுமானால், அதுவே இறைவனுக்கு அர்ப்பணிக்கும் சிறந்த நிவேதனமாகும்.

38. இரைப்பை பழுதடையும் வண்ணம் உண்டு உறங்கும்பொழுது, இலை தழைகளைத் தின்று வாழும் நிலைக்குத் தள்ளப்பட்ட ஏழை மக்களைப் பற்றி நினையாத இருதயத்தில் இறை வன் கடுகளவும் நுழைவதில்லை.

39 மனதால் வாழ்கின்றவன் மனிதன். நீதி நியாயத்திற்குப் பொருத்தமில்லாத ஆதிக்க மனமுடையவர்களுடைய மனதைவிட உங்க ளுடைய மனதை அதீத சக்தியுடையதாக மாற்றிவிடுங்கள். அங்ஙனம் நீங்கள் சுயரட் சகர்களாக மாறிவிடும் பொழுது விடுதலைக் குரிய வழிதானே பிறக்கும்.

40. சொல்லும் செயலும் சிந்தனையும் தாய் மொழிமூலம் செயற்படும் போது விடுதலையின் முதற்கதவு திறக்கப்படுகிறது.

41. மூர்க்கத்தனமான அசுரசக்தியைக் கூரிய

புத்தியாலும் நுணுக்கமான உபாயத்தாலும் எளிதில் வென்று விடலாம்.

42. வாழ்க்கை உரிமைகளுக்குரிய சமசந்தர்ப்பம் மனிதனுக்கு மாத்திரமன்று, விலங்கினத்திற்கும் இருக்க வேண்டும். அதைப்பகிர்ந்தளிக்கும் தேசம்தான் தர்மதேசம்.

43. தங்கள் தங்களை இன்னும் ஆழமான ரீதியில் அறிவதற்கும், நாள்தோறும் கூடுதலான கர்ம சக்தியைப் பெறுவதற்கும் பழகிக் கொள்ள வேண்டும். சொந்தப் பிரச்சினைகளை நேரடியாகப் பார்த்தறிவதற்கும், அதைச் சுயமாகவே தீர்ப்பதற்கும், இதைத் தவிர வேறு வழியில்லை.

44. கிடைக்கும் சுதந்திரம், சந்தர்ப்பம் இவற்றை சரிவர உபயோகப்படுத்தத் தவறினால் அது மீண்டும் கிடைப்பதரிது.

45. இராவணன், கம்ஸன், துரியோதனன், சூரன் போன்றவர்களுக்குத் தண்டனைக்குப் பின்புதான் பாவ மன்னிப்புக் கிடைத்திருக்கிறது.

46. பொருளின் தாரதம்மியங்களைக் கொண்டு வாழ்க்கையின் உயர்வு தாழ்வை நிச்சயிப்பது மடமை. மனதின் தராதரத்தைக் கொண்டு தான் அதை நிச்சயிக்க வேண்டும். மனத் தெளிவுடையவனுக்கு இலாபமும் நஷ்டமும் ஒன்றேயாகும்.

47. தேவையானதை வைத்துத் தேவையில்லாததை விட்டுவிடும் இயற்கையான அறிவு சகல ஜீவராசிகளிடத்திலும் இயல்பாக அமைந்திருக்கிறது. மனிதனில் அது விவேகம் அல்லது பகுத்தறிவு என்ற சிறப்பான குணத்துடன் இருந்தும் பேராசையால் அது அறியப்படுவதில்லை.

48. மனம் எப்பொருளில் கலந்திருக்கிறதோ அப்பொருளின் வடிவம் கொள்ளும்.

49. மனம் ஒரு நுண்மையான பொருளாதலால் அதை முறையாக ஆராய்ந்தால் எளிதில் அறியக் கூடியதேயாகும்.

50. அறிவினாலும், அப்பியாசத்தினாலும் மனதைத் தன்வசப்படுத்தத் தெரிந்தவனுக்கு வாழ்க்கை என்பது ஒரு காற்பந்து விளையாட்டுப் போன்று சுவைமிக்க விளையாட்டாகும்.

51. மனதை ஆத்மாவில் லயம் செய்து நிறுத்தும் நிலைதான் மனோலயம். மனவொடுக்கம். மனநாசம், மனதைக் கடந்தநிலை என்றெல்லாஞ் சொல்லப்படுவதுமஃதே.

52. அரசியல், பொருளாதாரத் தத்துவங்கள் சமயக்கொள்கைகளுக்கு மாறானதன்று. அவை சில மகத்தான உண்மைகளின் அடிப்படையில் சிந்தனை செய்து செயற்படுத்தும் பொழுது சமயம் அதை முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளும்.

53. ஆத்ம சுகம், மனச்சுகம், சரீரசுகம் என்ற மூவகைச் சுகங்கள் மனிதனுக்குத் தேவை, சரீர சுகமில்லாதவனுக்கு மனம் சுகம் இல்லை. மனச் சுகமில்லாதவனுக்கு ஆத்ம சுகம் இல்லை. ஆத்ம சுகம் பூரணமாயிருப்பவனுக்கு மனச் சுகத்திலும், சரீர சுகத்திலும் நாட்டமுமில்லை.

54. தர்மத்தையுணர்ந்து அதன் வழி நில்லாதவர்க்கு ஞானம் என்பது பிறப்பதில்லை.

55. தர்மம் காய் போன்றது எனில், ஞானம் பழம் போன்றதாகும். வாழ்க்கையில் தர்மம் என்ற காய் முற்றி ஞானம் என்ற பழமாகப் பழுக்கின்றது.

56. அடிப்படையில் விடுதலை வேட்கையும் வெளிப்படையில் உலக க்ஷேமமும் தான் ஒரு மத விசுவாசியின் இலட்சியமாக இருக்கவேண்டும்.

57. தர்மத்திற்கு இருக்கும் அதே ஆயுள் அதர்மத்திற்கும் இருக்கின்றது.

58. உயர்வதும் தாழ்வதுமாகிய இயற்கை நியதிகளைப் போன்று தர்மமும் அதர்மமும் காலாகாலத்தில் தேய்வதும் வளர்வதுமாகத் தோற்றமளிக்கிறது.

59. மத விசுவாசமுடைய சிறந்த அரசாட்சியின் துணையால்தான் அதர்மத்தை ஒழித்துத் தர்மத்தை நிலை நிறுத்தமுடியும். மக்கள் தர்மத்தை அனுஷ்டிக்கும் வகையில் ஆட்சி செலுத்தி தர்ம நெறியில் மக்களை ஒழுகத்

தொடங்கும் பொழுது ஆட்சியின் அவசியம் மக்களுக்குத் தேவையற்றதாகி விடுகிறது.

60. தர்மத்தின் அடிப்படையில் அரசாட்சி இருந்தால் தான், மதகுருமார்களினாலும் மதப்பிரசாரத்தாலும் பிரயோசனம் ஏற்படும்.

61. தர்ம சிந்தனைக்கு இடமில்லாத நிர்வாகமும், கல்வி முறையும் இருக்குமிடத்தில், எக்காலமும் அமைதி நிலவுவதற்கு இடமில்லை.

62. தர்ம சிந்தனை இல்லாத மக்கள் இருக்குமிடத்தில் எத்தகைய அரசாட்சியும் நிலைத்திருப்பதில்லை.

63. அரசாட்சியை விட தர்மம் பெரியதென்று மக்கள் நினைக்கும் பொழுதுதான் அரசாட்சி அதன் உண்மையான குறிக்கோளை அடையும்.

64. வேற்றுமையில் ஒற்றுமையிருக்கும் இயற்கை இரகசியத்தை அறிந்தவர்கள் உள்ளத்தில் சமரசம் தானாகவே பிறக்கின்றது.

65. பிராணன், மனம், புத்தி மூன்றும் ஆத்மாவில் லயிக்கும் பொழுது அதி அற்புதமான சுகம் பிறக்கின்றது.

66. எங்கு பண்பு குறைந்திருக்கின்றதோ அங்கு தருமமில்லை. தருமத்தின் செயலுருவம் தான் பண்பு.

67. தாய் தந்தையின் அந்தரங்க எண்ணங்களின் உருவ வடிவமாகத்தான் குழந்தைகள் பிறந்திருக்கின்றன.

68. தாய் தந்தையர்களின் அடிமனதில் பதிந்திருக்கும் எண்ணங்களுக்குத் தக்கபடி, பிறக்கும் குழந்தைகளின் அடிப்படைச் சுபாவமும், அமைந்திருக்கும்.

69. தர்ம சிந்தனைகள் அடி மனத்தில் பதியாதவர்களுக்கு நன்மக்கள் பிறப்பதில்லை.

70. தர்மத்தை உபாசிக்கின்றவர்களுக்குத் தர்ம தேவதை புத்திரனைகப் பிறக்கின்றது.

71. நல்லறமிக்க இல்லறத்திலிருந்து ஒழுக்கமுடைய மக்கள் பிறக்கின்றனர்.

72. நல்லறமில்லாத இல்லறமே ஒழுக்கங் கெட்ட பிரஜைகளுக்குக் காரணம்.

73. மாதா, பிதா, குரு, அரசன் இந் நால்வரும் அறநெறியில் வாழ்பவராகில், கெட்ட பிள்ளையும், கெட்ட சிஷ்யனும், கெட்ட பிரஜையும் இருக்க முடியாது.

74. சத்தியம், தர்மம் இவற்றை இரு கண்களாக வைத்து வாழ்கின்றவர்களுக்கு அரசியல் சலுகையும் பாதுகாப்பும் எதற்கு?

75. சுய நலம் கருதி கடமையும், சேவையும் செய்கின்றவர்களுக்கு இறுதியில் அதுவே துன்பத்திற்குக் காரணமாகின்றது.

76. அசுர குணம் படைத்தவர்களுக்கு நல்லுபதேசம் செய்தல், குளிர் ஜுரம் உடையவர்களுக்குக் கொடுக்கும் அன்னம் போன்று விஷமாக மாறுகிறது.

77. அறநெறி ஒழுங்கில்லாத அரசியல்வாதிகளின் ஆட்சியில், பஞ்சமா பாதகங்கள் பெருகும்.

78. சொந்தச் சுக துக்கங்களுக்குத் தானே காரணமென்பதை தன்னை ஆராய்ந்து அறிந்து கொண்டவர்களுக்கு நாளடைவில் நிறைந்த சாந்தியும் ஆத்ம சுகமும் கிடைக்கின்றது.

79. அறமில்லாதவனுக்கு இறைவனும், இறை உணர்வு இல்லாதவனுக்கு அறமுமில்லை.

80. அறநெறியும், அரசாட்சியும் பிராணனும் சரீரமும் போன்றவை. அறம் குன்றிய ஆட்சி வீழ்ச்சியடைகின்றது.

81. உலோகாயுதக் கல்வியால் புத்திக்குட்பட்ட காரியங்களைத்தான் கற்பிக்க முடியும். சமயக் கல்வியால் புத்திக்கும் அப்பாற்பட்ட விஷயங்களையும் அறியமுடியும்.

82. எல்லா மனிதருடைய அடிப்படைத் தேவைகளும் ஒன்றாயிருந்தபோதிலும் அவை நிறைவேறும் முறைதான் கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப மாறுபடும்.

83. பன்றியின் சயனசுகம் சேற்றில் தங்கியிருப்பது போன்று நெறி கெட்டவர்களுக்குப் பஞ்சமா பாதகங்கள் சுகமாய்த் தோன்றும்.

84. எருதிலிருந்து பால் சுரந்தாலும், வஞ்சகர்களிடத்திலிருந்து அன்பு சுரப்பது அரிதிலும் அரிது.

85. உருக்கினால் உருகாத உலோகப் பொருள் உலகில் இல்லாதிருக்கலாம். எனினும் மூடர்களின் உள்ளம் உருகுவது மிகக் கடினம்.

86. வித்திலின்று மரம், மரத்திலிருந்து பூ, காய், பழம் உண்டானாலும் மரத்தில் காய்த்துப் பழுத்த பழம் மரத்திற்குரியதன்று. இது மரத்தின் நியதி. அதேபோன்று தவத்திலிருந்து ஞானம, ஞானத்திலிருந்து சுகம பிறக்கும். ஞானசுகம் ஞானிககு மட்டும் உரியதன்று,

87. ஞானியின் ஞான சுகம், ஞானகாரகனாகிய ஈஸ்வரனுக்கு அர்பபணம் செய்யபபடும் பொழுது இறை சிருஷ்டிகள் அதனைப்பகிர்ந்து கொளகின்றன.

88. பிறருடைய நலத்தைப் பேணி வளர்ப்பவர்களின சுய சுகம், பர சுகமாக மாறிவிடுகிறது.

89. உனது சொந்த விருப்பு வெறுப்புக்களைப் புறககணித்து இறைவனுடைய விருப்பத்திற்கு உன்னை ஆளாக்கி விடும் போதே இறை அருளுக்கும், அன்புக்கும் நீ பாத்திரமாகிறாய்.

90. உன்னிடமிருக்கும் சகலவிதமான உடைமைகள், உரிமைகளை முற்றாக விட்டுவிடு. உன்னை நிரக

கதிக்கு உட்படுத்து. உனது சுய சிந்தனையி லிருந்தும் செயலிலிருந்தும் விலகு. பட்டம் பதவிகளை உதறு. கற்ற கல்வியை நிஷ்பிர யோசனப்படுத்து. இங்ஙனம் நீ செய்யமுடியு மானால் "சரணாகதி" என்ற உயர்ந்த நிலை யால் ஞானத்தின் உச்சநிலை அடைவாய்.

91. இரத்த சோகையால் துன்புறும் நோயாளிக்கு இரத்த விருத்திக்குரிய மருந்தினாலன்றி வேறு ஒன்றினாலும் சுகம் கிடைக்காதது போன்று, அஞ்ஞானத்தினால் துன்பப்படுகிறவர்களுக்கு, ஞானத்தால் அன்றி, வேறொன்றினாலும் சுகம் கிடைப்பதில்லை.

92. தவத்தினாலன்றி உபதேசத்தினால் ஞானசக்தி உண்டாவதில்லை.

93. உபதேசத்தினாலும், உபதேசம் பெறுவதினா லும் பூரணத்துவம் அடையமுடியாது. பற் றின்மையாலேயே அதை அடையலாம்.

94. மதமும் தர்மமும், முத்துச்சிப்பியும் முத்தும் போன்றது.

95. சரீரம் இருக்கும்வரை ஞானிக்கும் பசி, தாகம், உறக்கம், பிணி போன்ற சரீர உபாதைகள் இருக்கத்தான் செய்யும்.

96. குளிர்ந்த கார்முகிலை உஷ்ணமுகில் உராயும் பொழுது இடியும், மின்னலும் உண்டாவது போன்று தர்மத்திற்கும், அதர்மத்திற்கும்

நடக்கும் போராட்டத்தில் சத்தியம் என்ற மின்னல் தோன்றுகிறது.

97. குருவை குருவாகவும், தெய்வத்தை தெய்வமாகவும் கருதுகின்றவர்களுக்குத்தான் குரு தேவை. தெய்வம்தான் குரு என்று காணுகின்ற பேரறிஞனுக்கு குருவின் தேவைதான் என்ன?

98. நீரிலும் நிலத்திலும் வாழ்கின்ற சில பறவைகள் போன்று ஞானியும், இகத்திலும் பரத்திலும் சஞ்சரிக்கக்கூடிய தகுதியுடையவர்.

99. பறவைகள் உண்பது, கூடுகட்டுவது, தேகசுத்தம் செய்வதாகிய மூவகைக் கருமங்களையும் தமது ஒரே ஒரு அலகினால் மாத்திரஞ் செய்து முடிக்கின்றன. அதேபோன்று ஞானியின் ஞானமும் அநேக கருமங்களைச் செய்து முடிக்கும் வல்லமையுடையது.

100. மயிலுக்குத் தேவாங்கு ஜன்ம விரோதியாய் இருப்பது போன்று காமம் ஞானத்துக்கு ஜன்ம சத்துரு ஆகின்றது.

101. மதுவை அமுதம் என்று கருதும் அசுரர் போன்று அஞ்ஞானி சிற்றின்பத்தை பேரின்பம் எனக் கருதுகிறான்.

102. புலிக்கு அறியுந்தன்மை நுகர்ச்சியிலிருப்பது போன்று, ஞானியின் அறிவும் அகக்கண்ணில் இருக்கின்றது.

103. சக்தி திரண்டு பொருளாவது போன்று நிலையான சக்தி திரண்டு ஞானமாகிறது.

104. கருவுற்றிருப்பவர்களுக்கு அன்னத்துவேஷம் உண்டாவது போன்று ஞானக் கருவுற்றிருக்கும் ஞான சாதகனுக்கு விஷய சுகங்களில் வெறுப்பு உண்டாகிறது.

105. கடம்புப்பால் குடித்துக் குடல் அழுக்கை நீக்கும் கன்றுக்குட்டி போன்று ஞான சாதகன் ஞானப்பால் குடித்து அக மலங்களை நீக்கிய வண்ணம் இருப்பான்.

106. புறப்பார்வையிலிருக்கும் தூரம், இடைவெளி, நேரம், காலம் முதலியவை அகப்பார்வையில் இருப்பதில்லை.

107. ஞானமும் பக்தியும் இரு கண்கள் போன்றவை. ஞான சாதகன் நிலைத்த பொறுமையுடையவனாகில் குறியின்கண் நெருங்கிக் கொண்டிருப்பதாகக் கருதலாம்.

108. உண்ணும் மருந்து பலிதமாவதற்குப் பத்தியம் அவசியமாயிருப்பது போன்று தவப் பயனுக்கு பிரமசாரியம் என்ற பத்தியம் அவசியமாகும்.

109. கடமை என்பது லௌகீகச் செயலாயிருந்தாலும் அதில் அன்பும், தியாகமும் கலக்கும் பொழுது ஞான சாதனமாக மாறுகின்றது.

110. தேனில் ஊறவிட்ட பழச்சுளைகள் கெட்டு விடுவதில்லை. அதேபோன்று இறை சிந்தனையில் ஊறியிருக்கும் மனமும் புத்தியும் எக்காலமும் கெட்டு விடுவதில்லை.

111. பிரபஞ்ச வாசனைகள் அற்றிருக்கும் மனம் அழமான மௌன சுகத்தை அனுபவிக்கின்றது. நீரைப் பிரித்துப் பாலை மாத்திரம் உண்ணும் பறவையை அன்னமென்பர். அன்னத்தைப் போன்று தன்னிலிருக்கும் அசத்தைப் பிரித்துச் சத்தை மட்டும் உண்ணுகின்றவனை ஞானி என்பர்.

112. ஆசையின் மத்தியில் அசைவற்றிருக்கும் இரகசியத்தை அறிந்தவனை ஆசைகள் தீண்டுவதில்லை.

113. சர்வ சக்திதரனும், சர்வ வியாபியுமாகிய இறைவனை எல்லா மதத்தவர்களும் ஏகோபித்து வழிபடுகின்றனர். அதே இறைவன் பெயரைச் சொல்லி எல்லா மதத்தினரும் ஒன்றோடொன்று மோதி வாழ்கின்றனர் என்ன மதியீனம்!

114. அன்பு என்பது ஒரு நல்ல மன விகாரம். பக்தி என்பது மனதைக் கடந்த விளக்க முடியாத அற்புத ஆத்ம சுகம்.

115. கோது, சுளை, வித்துக்குள்ளே இருக்கும் பீஜம் போன்றே முறையே மதம், பண்பாடு, தர்மம் அமைந்திருக்கின்றது.

116. பண்பாடு என்பது தர்ம நெறியிலிருந்து புடம் பண்ணியெடுத்த நல்லோர் பழக்க வழக்கமாகும்.

117. வியாதிக்கு ஒளஷதம் போன்று வாழ்க்கை என்ற வியாதிக்கு ஒளஷதமாயிருப்பது தர்மம்.

118. சரீரம், நித்தியம் என்றும் அநித்தியம் என்றும், வாதிட்டு வீணே காலம் கழிப்பவர்கள் சரீரத்தை உள்ளபடி பிரயோசனப்படுத்தத் தெரியாத வீணர்களேயாகும். சரீரத்தை மிஞ்சிப் போற்றுவதும் தூற்றுவதும் குற்றமாகும்.

119. விஷத்தை விஷ வித்தையால் இறக்குவது போன்று அஞ்ஞானம் என்ற விஷத்தை ஞானம் என்ற ஔஷதத்தால் சுகப்படுத்தலாம்.

120. திசை அறிகருவி திசையைக் காட்டுவது போன்று உண்மையான வாழ்க்கையின் திசையைக் காட்டும் கருவி மதம்,

121. யானைக்கு கரும்பு போன்று தர்மம் மனித வாழ்க்கைக்கு உவப்பான கரும்பு.

122. பால் கெட்டால் நஞ்சாக மாறுகின்றது. ஒழுக்கம் குறைந்த சமுதாயம் கெட்ட பாலுக்குச் சமானம்

123. மரத்தில் பூக்கும் பூக்கள் எல்லாம் காயாவதில்லை. சில உதிர்ந்தே போய்விடுகின்றன.

அதேபோன்று மனதில் உதயமாகும் எண்ணங்கள் முழுவதும் செயற்படுவதில்லை.

124. மலரிலிருந்து தேனூறுவதுபோன்று தியானத்தினின்று பெருஞ்சுகம் ஊறி வருகின்றது.

125. நீர் வற்றிய குட்டையில் துடித்துச் சாகும் மீன்கள் போன்று தர்மம் குன்றிய மனித சமுதாயம் பஞ்சமா பாதகங்களாக துடிதுடித்து மடியும்.

126. நீர் கலந்த பால் கெட்டுப்போனல் அது பாலின் குற்றமன்று. நீர் கலந்தவனின் குற்றமேயாகும். அனுசாரங்களினுல் சமயம் கெட்டுவிட்டால் அது சமயத்தின் குற்றமன்று. அனுசாரங்களைப் புகுத்திய மனிதனின் குற்றமேயாகும்.

127. மனிதன் விரும்பினுலும் விரும்பா விட்டாலும் இருளும் ஒளியும் என்றென்றும் இருப்பது போன்று உலகம் இருக்கும் வரையில் தர்மமும் அதர்மமும் இருந்தே தீரும்.

128. உத்தமமான பக்தி பயத்தினுல் உருவாகும் ஒரு மன விகாரமன்று. சத்திய தரிசனத்தின் அனுபூதி மாத்திரமாய் நிற்கும் விளக்கமுடியாத கோடானுகோடி இன்பங்களின் திரட்சியேயாகும்.

129. பிரார்த்தனை, வழிபாடு, பூஜை, ஜெபம், தவம் முதலியவற்றின் காரிய சித்திதான் பக்தி.

130. கருமம், யோகம், ஞானம் முதலிய மரங்களில் காய்த்துக் கனிந்த கனியே பக்தி.

131. புளிமாங்காய், நன்ருக முற்றிப் பழுத்தால் சுவை மிக்கதாய் மாறுவது போன்று விஷய வாசனைகளால் புளித்துக் கெட்டுப்போன வாழ்க்கை, பக்தி நெறியால் முற்றிப் பழுக்கும்போது நிலையான சுகத்தைக் கொடுக்கின்றது.

132. வெளிச்சம் ஒன்றினலன்றி வேறெதனுலும் இருள் நீங்குவதில்லை. அதே போன்றே சுத்த ஞானத்தினலன்றி வேறெதனுலும் வினைப் பயன் நீங்குவதில்லை.

133. தேன் கலந்த மூக்கனி ரசம்போன்று தெய்வீகம் கலந்த கர்மம், யோகம், ஞானம் என்ற முக்கனி பிழிந்தெடுத்த ரசமே பக்தி.

134. சந்துப்புழு, பயிர்களின் சந்து பொந்துகளில் குடியிருந்து பயிரை நாசஞ் செய்வதுபோன்று வஞ்சகக் குணம் இருதயத்தில் குடியிருந்து மனிதனை அடியோடு நாசஞ் செய்கிறது.

135. நீரோட்டத்திற்கெதிரே நீந்திப் பழகுவதால் சரீரம் வலுவடைவது போன்று வாழ்க்கையில் வருங் கஷ்டங்களை எதிர்த்துப் போராடுவதனுல் மனம் வலுவுடையதாகின்றது.

136. இனம் இனத்தை நாடுவது போன்று போலிகள் போலிகளை நாடுகின்றனர்.

137. நாய் போன்ற பிராணிகளுக்கு வெறி பிடித்தால் அடித்துக் கொல்லலாம் என்று வைத்

துக் கொள்வோம். ஆனல் மனித சமுதாயத்திற்கு வெறி பிடித்தால் என்ன செய்வது?

138. சமயமென்றால் கடைந்தெடுத்த வாழ்க்கைத் திட்டத்தின் பெட்டகமாகும்.

139. எந்த மதம் நிலையான தர்மத்தை உட்கொண்டிருக்கின்றதோ, அந்த மதம் என்றென்றும் உயிரோட்டம் உடையதாயிருக்கும்.

140. ஞானி ஞானோதயத்திற்குப் பின்னும் மக்களையும் மாநிலத்தையும் நன்றி உணர்வுடன் பார்க்கவேண்டும்.

141. பலாப்பழத்தின் சுவையும், குணமும் சுளையில் தங்கியிருப்பது போன்று மதத்தின் சாரம் மத தர்மத்தில் கலந்திருக்கிறது.

142. மதத்தில் இடை புகுந்து அனுசாரங்களுக்காக மதத்தைப் புறக்கணிப்பது எலிக்குப் பயந்து இல்லத்தைச் சுடுவதற்கு ஒப்பானது.

143. ஜனநாயக ஆட்சியில் எதிர்க்கட்சிகள், களைகொல்லி திராவகம் போன்றவை. ஆனல் அது அசிறறுத் திராவகமாக மாறினல், பயிரையுஞ் சேர்த்து அழிந்து விடுவது போன்று ஆட்சியை அழித்துவிடும்.

144. மாமிசம் உண்பவனைப் பார்த்து பிணந்தின்னி என்றொருவன் சொல்வானகில்

விபரீத பயன் விளையும். எனவே உண்மையைச் சொல்லும் பொழுது பண்புடன் சொல்ல வேண்டும்.

145. நிலத்தில் பாடுபட்டு உழைக்கும் உழைப்பாளியின் உழைப்பில்தான் உண்மையான ஜீவகளை பொங்கி வழிகின்றது.

146. ஆத்மஞான சுகமும், உத்தமமான பக்திச் சுவையும் ஒன்றேயாகும். பக்தியும், ஞானமும் ஆத்மாவின் இரு கண்களேயாகும்.

147. மனிதன் இறைவனில் இரண்டறக் கலந்திருக்குஞ் சுகமே பக்தி.

148. தேன் ஜாடியில் வீழ்ந்திருக்குந் தேனீக்கு எங்ஙனம் தேனைச் சுவைக்க முடிவதில்லையோ அதே போன்று பிரபஞ்ச வாசனையில் மூழ்கிக் கிடக்கும் மக்களுக்குப் பக்தி என்ற தேனமுதைச் சுவைக்க முடிவதில்லை.

249. பொறியில் வீழ்ந்திருக்கும் பறவைக்கு உணவின் சுகம் இல்லாதது போன்று உலகப்பற்று என்ற பொறியில் வீழ்ந்து கிடக்கும் மனிதனுக்கு உண்மையான பக்தியின் சுவை தெரிவதில்லை.

150 நித்தியம், அநித்தியம், சிறுமை, பெருமை முதலியவற்றைச் சரிவர ஆராய்ந்து எது மெய் என்று அறியும் பொழுது பக்தியுணர்வின் ஊற்றுவாய் திறக்கப்படுகின்றது.

151. குற்றத்தைக் கண்டிப்பதும், திருத்த முயற்சிப்பதும் சமய சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ற வாறு செய்யப்படாவிட்டால், கிடைக்கும் பலன் கலகமும் விரோதமுமாகும்.

152. உனது அறிவைப்பற்றிய அறிவு உனக்கில்லாமல் இருப்பதே உனது துன்பங்களுக்கெல்லாம் மூல காரணம்.

153. தன் அபிமானத்தை தன் அளவில் அடக்கமாக வைத்திராவிட்டால் அது அகங்கார வடிவம் கொள்ளும். அகங்காரத்தின் விளைவு நாசம்.

154. உனது தீய கர்ம வினைகளின் திரட்சியே ஏழரைச் சனியாய் வடிவெடுக்கின்றது. அதற்கு அந்நியமாய்ப் பிறிதொரு சனிதோஷம் கிடையவே கிடையாது.

155. சரித்திர கால வரலாற்றினுல் மாத்திரம் ஒரு தேசம் என்றும் பெருமை யுடையதாய் இருப்பதற்கில்லை. காலத்திற்கேற்றவாறு அபிவிருத்தி அடைந்தால் தான் சரித்திரப் பெருமையும் நிலைத்திருக்கும்.

156. பண்பாடு என்பது தொன்று தொட்டு வந்த பழக்கங்கள். அன்று கோடானுகோடி மக்களால் பல்லாயிரம் தலைமுறைகளாகப் படிப்படியாய்ச் சீர்திருத்தியெடுத்த வாழ்க்கை முறையாகும்.

157. பழையதானாலும் கெட்டுவிடாமல் இருப்பது தர்மம் ஒன்றேயாம்.

158. விவேகமிருந்தும் சினமும், சஞ்சலப்படும் சுபாவமும் உடையவர்களுக்கு நிம்மதி என்பதில்லை.

159. விவேகம் இல்லாத கல்வி கடிவாளம் இல்லாத குதிரை போன்றது.

160. குலம், கோத்திரம், பிறப்பு இவைகளால் ஒருவனைக் கணிப்பது பிழை. ஒருவனுடைய மேன்மையும், தாழ்வும் அவனது குணத்தைப் பொறுத்து இருக்கிறது.

161. சத்தியம், தானம், பொறுமை, ஒழுக்கம் சாந்தம், தபசு இவைகளால் எவன் பிரமத்தை அறிய முயற்சிக்கிறானோ அவனே உத்தமமான பிராமணன். அத்தகையவன் சண்டாள குலத்தில் பிறந்தாலும், பிராமணனேயாம்.

162. ஞானம் கைவந்த போதிலும், மக்களையும் மாநிலத்தையும் மறப்பது இறைவனைப் புறக்கணிப்பதற்கு ஒப்பாகும்.

163. உனது திறமைகளை அடக்கி ஒடுக்காதே. அதைச் சீரியமுறையில் செயற்படுமாறு சுதந்திரமாகத் திறந்துவிடு.

164. எங்கு கருணை இருக்கின்றதோ அங்கு தர்மம் இருக்கும். தர்மம் இருக்குமிடத்தில் சுகம் இருக்கும். சுகம் இருக்கும் இடத்தில் இறைவன் இருப்பார்.

165. மன்னனும், மனிதனும் உனக்கு மன்னிப்பு அளித்தாலும் உனது தீவினைப்பயன் உனக்கு மன்னிப்பளிப்பதில்லை.

166. தன்னடக்கம் இல்லாதவர்களுக்குக் கிடைக்கும் அனுகூலம் சில சமயம் பிரதிகூலமாக மாறிவிடுகிறது.

167. வண்டுதான் தேன் உண்ணுமே தவிர மண்டூகம் (தவளை) அதை உண்பதில்லை. அதே போன்று உலக ஆசையில் மூழ்கிக் கிடப்பவர்களுக்கு ஞானத் தேன் உண்ண விருப்பம் வருவதில்லை.

68. அன்றலர்ந்த மலர் அன்று கெடும். மலராமல் மலர்ந்திருக்கும் ஞான மலர் என்றும் கெடுவதில்லை.

169. அந்தரங்க சுத்தியில்லாத ஒரு சமய வாதியை விட நல்லொழுக்கம் உடைய ஒரு நாஸ்திகன் மிகச் சிறந்தவன்.

170. தன்னறிவு தெளியும் வரையில் சான்றோன் ஒருவரை நாடி நிற்பதால் பெரும் பயன் உண்டு.

171. உன்னில் தேய்வதும், வளர்வதும் எவை என்பதைக் கண்டறிவது மிகக் கஷ்டம். நுண்ணறிவை நிதானமாய் உபயோகித்து அறியவும்.

172. தனக்கு மதிப்புத்தந்து தன்னைப் புகழ்ந்து கொண்டிருப்பவர்கள் மட்டும்தான் நல்லவர்கள், மற்றவர்களெல்லாம் பொல்லாதவர்கள் என்று நினைப்பவர்கள்தான் பொல்லாதவர்கள்.

173. குளத்தில் நீரிருக்கும்வரையில் மீன் இருக்கும், ஈர்ந்தெடுப்பதற்கு ஏதாவதொன்று இருக்கும் வரையில் மனிதர்கள் உன்னை நாடி நிற்பர். ஒன்றுமே இல்லையென்றால் ஒருவரும் சாவதில்லை.

174. கோயிலைச் சுற்றிவாழும் நாய்களெல்லாம் பிராமணனாக மாறுவதில்லை. மகான்களைச் சுற்றி நிற்பவர்கள் எல்லாம் நல்லவர்கள் ஆவதில்லை.

175. பழமை வாய்ந்ததாயினும், புதியதாதாயினும் அப்படியே ஏற்றுக்கொள்ளாதே. விவேகத்தினால் இரண்டிலுமிருக்கின்ற நல்லவைகளையே தேர்ந்தெடுத்துக் கொள்.

176. ஊசி முனையில் நிற்கப் பழகினாலும், மனநுனியில் ஒரு விநாடிதானும் நிற்கப் பழகுவது மிகக்கடினம்.

177. நிறம் மாறும் ஓணான் போன்று அடிக்கடி குணம் மாறுபவர்களிடத்திலிருந்து வெகு தூரம் விலகி நில்.

178. நண்பனுகிலும் கூரிய கத்தி உடையவன், வளர்ப்பு மிருகமாயினும் கூரிய கொம்புடையது, மனிதனுயினும் பேராசை பிடித்தவன், இவ்வியல்புடைய மூவகையினரும் ஆபத்தானவர் என்பது அறிக.

179. தன்னயம் கருதாமல் அன்பு செலுத்துகிறவர்களுடைய அன்புதான் உண்மை அன்பு. அவர்கள் தான் உத்தம நண்பர்கள்.

180. சிற்றின்ப நுகர்ச்சிகளில் காணுந் தோல்விகளை தோல்வி என்று கருதி வருந்தாதே. அது திருந்துவதற்குரிய ஒரு கடுந் தண்டனை என்பதை உணர்க.

181. கடலின் மேற்பரப்பில் தான் அலையும் இரைச்சலும் இருக்கின்றது. ஆழத்தில் அலைகள் இல்லை. அதே போன்று மேல் மனத்தின் செயல் நிலையில் மாத்திரந்தான் துயரமும் அமைதிக்குறைவும் நிலவுகின்றது. அடிமனதில் இறங்கிச் செல்லும் அளவிற்கு ஆத்மசக்தியின் வலிவும், பேரானந்தமும் தான் அனுபவமாக நிலவுகிறது.

182. கண்டதும், கேட்டதும் எல்லாம் விரும்பாதே. நல்லவையில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து

அதை அழுத்தம் திருத்தமாகச் செயல் படுத்துக. பலன் நிச்சயம் கிடைக்கும்.

183. உலகியல் இன்பம், பால்யம், இளமை, முதுமை என்பதற்கிணங்க விதம் விதமாக அனுபவப்படுகின்றது. ஞான இன்பமோ எந்தப் பருவத்திலும், ஒரே மாதிரியான சுகானுபவம் உடையது.

184. அருளும் பொருளும், உயிரும் சரீரமும் போன்று ஒன்றோடொன்று தொடர்புடையவை. இரண்டையும் படைத்த கரம் ஒன்று ஆகையால் இவை இரண்டையும் இரண்டு கோணத்தில் வைத்துப் பார்த்து வாழ்வதில் அர்த்தமேயில்லை.

185. பழங்கள் பழுத்தால் மரத்தின் மேலும், கீழும் நல்லதும் கெட்டதுமாகிய பலவித பிராணிகள் வந்தடைகின்றன. அதேபோன்று ஞானம் பூர்த்து நிற்கும் இடத்தில் பலதரப் பட்ட மனிதர்களும் வந்து சேர்கின்றனர்.

186. மதம், ஆத்மீகம் இவைகளைத் தவறான வழியில் கவர்ச்சியுடையதாக்கி வளர்ப்பதால் அது விரைவில் அழிந்துவிடும்.

187. துறவிகளின் பூர்வ வரலாற்றை அறிய முயற்சிப்பது, இறந்த குழந்தையின் சாதகம் வாசித்து அறிவதற்கு ஒப்பானது.

188. நேரம், காலம், கடவுள் இவை உன்னைநோக்கி வரும் எனக் காத்திருக்காதே. இம்மூன்றும் தீவிர முயற்சியுடையவனில் எப்பொழுதும் தங்கி இருக்கின்றது.

189. உனது கெட்டித்தனத்தால் பலதும் சாதிக்க முடியலாம். ஆனால் சாதித்ததை நிம்மதியுடன் சம்பூர்ணமாய் அனுபவிப்பதற்குத் திருவருள் வேண்டும் என்பதை அறிக.

190. குளிப்பது, உண்பது, உறங்குவது, புணர்வது இவற்றை மனம்போன போக்கில் செய்தால தேகசுகம் கெடும்; நோய்வாய்ப்படுவாய். ஊர்ந்தும், பறந்தும் வாழ்கின்ற பற்பல பிராணிகளின் தினசரி செயலுக்கு ஒரு நேரமும் நெறியும் உண்டு. மனிதனுக்கென்று ஒரு நன்னெறி இருந்தும், நெறி தவறி வாழ்கின்றவர்களின் வாழ்வால் என்ன பயன்?

191. உண்ணும் உணவின் அதிசூக்குமமான பகுதிக்கும் மனதிற்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன. எனவே நல்லுணர்வுகளை வளர்க்கும் சாத்வீக உணவை உண்க!

192. சுகமுடன் வாழ்வதற்கும், இறப்பதற்கும் ஒரு நெறியும் குறியும் வேண்டும். அது இல்லையானால் திசை தடுமாறித் திரிய நேரிடும். இடறுவீர்.

193. முத்துச் சிப்பியை உடைத்துப் பார்த்தாற் றான் முத்து இருப்பதும் இல்லாததும் தெரி

யும். ஒருவருடைய இதயத்தை ஊடுருவிப் பார்க்கும் திறமை உனக்கிருந்தால் மட்டும் தான் மற்றவர்களுடைய நன்மை, தீமைகளை சரிவர அறிய இயலும்.

194. உனது கடமைகளைச் செயற்படுத்தும்பொழுது மற்றவர்களுக்கு இடையூறு விளையாமல் பார்த்துக் கொண்டால், இன்னலும் விரோதமும் குறையும்.

195. ஒரு தேசத்தின் இயற்கை வளங்களையும் செயற்கைச் செல்வங்களையும், அந்நாட்டு மக்கள் சம தர்ம ரீதியில் அனுபவிப்பதற்குரிய சந்தர்ப்பம் இருக்கவேண்டும் அங்ஙனம் இருந்தால் பஞ்சமா பாதகங்களைச் செய்யத் தூண்டும் உணர்வுகள் குறையும்; தேசப்பற்றும் தேச பக்தியும் பெருகும்.

196. மாதா, பிதா, குரு, மன்னன் இவர்கள்தான் தண்டிப்பதற்குரிய உரிமை உடையவர்கள். மற்றவர்கள் அதனைச் செய்தல் குற்றமாகும்.

197. உலகத்தைப் புரிந்து வாழ். துயர் நீங்கும்.

198. வெளிச்சத்திற்குப் பின் இருள் இருப்பது போன்று நல்லதென்று கருதுவதின் பின்னுக்குத் தீயதும் இருக்குமென்றறிக.

199. பகவான் என்ற சொல் இறைவனுக்கு மாத்திரம் பொருத்தமானது.

200. உலகத்தில் மனிதத் தன்மை வளரும் அளவிற்குப் பிரச்சினைகள் தானாகவே குறையும். ஆகையால் சகலவிதமான செயல்களும் மனிதத் தன்மையை வளர்த்தெடுக்கும் முறையில் அமையவேண்டும்.

201. சீரிய குணந்தான் செல்வங்களில் சிறந்த செல்வம்.

202. தனது இதயத்தைப் பரிசுத்தப்படுத்தி எடுப்பதுதான் நிலையான சம்பத்து. அது எதனாலும் அழிக்கப்படுவதில்லை.

203. என்னதான் இருந்தாலும் நல்ல குணமில்லாவிட்டால் ஜீரண சக்தி குறைந்தவர்கள் உண்ணும் உணவு போன்று பிரயோசனமற்றது.

204. நீ ஒரு சக்திக் கனலாக மாறும் பொழுது உன்னை நோக்கி வரும் பிரச்சினைகள் தானாகவே கருகிவிடும்.

205. உலகம். உலகியல் தேவைகளில் தன்னிறைவு எய்தினாலும், ஆத்மீக சைதன்யத்தின் உட்செறிவு இல்லாவிட்டால், சமுதாயத்தின் நிலை நாய்க்கூட்டத்தினுள் வீசப்பட்ட மாமிசத்துண்டு போலாகிவிடும்.

206. ஆத்ம சித்திகள் மனம் புத்தியைக் கொண்டு அப்பியாசித்து அடையக் கூடியதன்று. மனம் புத்திகள் அகந்தையால் செயற்படுபவை. ஆகையால் அகங்கார நாசத்திற்குப் பின்

தோன்றும் விசேஷ பேறுகள்தான் ஆத்ம சித்திகள்.

207. நீ ஏதோ ஒரு துறையில் சிறிதளவு அறிவு பெற்றிருக்கலாம். அதை வைத்துக்கொண்டு படித்தவன், அறிவுடையவன், நாகரீகமானவன் என்றெல்லாம் அகங்கரித்தால் அது உன்னைச் சர்வநாசத்தில் ஆழ்த்திவிடும்.

208. நீ எதைக் கற்றறிந்தாலும் உன்னுடைய சொந்தப் பிரச்சினைகளுக்கு நீயாகவே தீர்வு காணமுடியாதிருந்தால் கற்றதின் பயன் என்ன?

209. எப்பொழுதும் எல்லாவற்றிலும் சந்தேகப் படும் சுபாவம் உடையவர்கள் ஒன்றையும் சரியான முறையில் அறிவதும் அனுபவிப்பதும் இல்லை. எதையும் நிலையாக அடைவதும் இல்லை.

210. மனதைச் சரியான முறையில் கட்டுப்படுத்துவதற்குரிய பயிற்சியும், மனிதசக்திகளுக்கெல்லாம் ஆதாரமாய் இருக்கின்ற கடவுள் சக்தியில் முழு நம்பிக்கையும் இல்லாவிடத்தில் மற்றெல்லாம் இருந்தாலும் நிலையான சுகமும் சாந்தியும் உண்டாவதில்லை.

211 இன்று வரையில் நீ செய்துவரும் கர்மங் களில் அதிக பங்கும், உன்னுடைய சரீர மனம் இவைகளின் சக்தியைக் குறைக்கக் கூடியதும் சொந்த ஆத்மாவை வஞ்சிக்கக் கூடிய செயல்களும்தான் செய்து வருகின் ருய். ஒரு நாளைக்கு ஒரு தரமாவது தனி மையில் இருந்து ஆழமாய்ச் சிந்தனை செய், இந்த உண்மை விளங்கும். எனவே சிந்தனை செய்து தெளிவுபடுத்திய பிறகு மனம், சரீ ரம், புத்தி இவைகளைப் பலப்படுத்தக்கூடிய தும், ஆத்மாவின் சுகத்திற்கேற்றவாறும் உரிய கர்மங்களை மாத்திரம் செய்தால் சுக முடன் வாழலாம்.

212. முறையறிந்து செய்தால் ஒரு சிறு செயல் மூலமாகவே இறைவனுடைய திருவருளை எளிதில் பெறலாம்.

213. நீ இறைவனை நோக்கிக் கீழ் வருமாறு பிரார்த்தனை செய். என்னுடைய பல வீனத்தாலும், அஞ்ஞானத்தாலும் பல குற் றங்கள் செய்தும், நல்லது பலதும் செய் யாமலும் விட்டேன். கருணைகூர்ந்து என்னை மன்னித்துவிடு. இங்ஙனம் உன்னுடைய நெஞ்சுருகும் வண்ணம் பிரார்த்தனை செய்து வந்தால் இந்தப் பிறவியிலேயே பாவங்கள் நீங்கி திருப்தியும் சுகமும் பெறலாம்.

214. இதில் கூறப்பட்டிருக்கும் உண்மைகளை நீங்களாகவே உங்களில் கண்டறிந்து சுயம் செயல்படுத்துவீர்களாக.

"பரமேஸ்வர ஸ்மரணம்"

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"

# வஜ்ரம்ருதம் - இரண்டாம் பாகம்

1. இறைவனைக் காண்பது கடினமான காரியமன்று. அதனைப் பார்ப்பதற்குரிய கண்ணுடியாகிய இருதயத்தைப் பரிசுத்தப்படுத்துவதுதான் மிகக் கடினமானது.

2. இறைவன் பொருட்டு தனக்கு மிகப் பிரியமானதைவிட்டு விடுவதற்கும், மிகவும் வெறுப்பானதை ஏற்றுக்கொள்வதற்கும் தயாராயிருப்பவனே யதார்த்தமான இறைபக்தன்.

3. ஞானம், அது ஒரு இரவில் அடையக் கூடிய காரியமல்ல. நாகமணியைச் சுற்றிக் கிடக்கும் நாகம் போன்று, ஜீவனைச் சுற்றிக் கிடக்கும் தீய வாசனைகள் கடுந் தவத்தால் நீங்கும் பொழுது மாத்திரம்தான் ஞானம் பிரகாசிக்கும்.

4. பார்க்க பார்க்க, பழகப் பழக அலுப்பும் வெறுப்பும் தட்டாமலிருப்பது எதுவோ அதுதான் சாஸ்வதமான அன்பும் இன்பமுந் தரும் முழு முதற் தெய்வம்.

5. புலனுணர்வுகள் கடுகளவேனும் இருக்கும் வரை ஞான ஒளியைக் காண்பதென்பது வெறும் ஒரு மனச் சங்கற்பம்.

6. பக்தியென்பது மன உணர்வுகளை மீறிச் செல்லும் பொழுது அனுபவப்படுகின்ற ஒரு தனித்த பேரானந்தம்.

7. இந்தப் பிரபஞ்சத்தை நாங்களோ எங்களுடைய பாட்டனுரோ படைக்கவில்லை. அதைப் படைத்தவன் இன்னொருவன் இருக்கின்றான். நீ அணிந்திருக்கும் ஆடைகளை நிர்மாணிப்பவரை நேரில் கண்டிருக்காவிட்டாலும் அப்படியொருவர் இருக்கின்றார் என்பதை நம்பித்தானுகவேண்டும். இப் பிரபஞ்சம் சூனியத்திலிருந்து தோன்றவில்லை. இதைப் படைத்தவன் ஒருவன் இருக்கின்றான் என்ற பிரத்தியட்ச ஞானம் உனக்குண்

டாகும் பொழுது நீயும் மற்றவர்களும் கர்த்தாக்களல்ல வெறும் கருவிகளேயென்ற அறிவு வரும், அகங்காரம் ஒழியும்.

8. அடிக்கடி உனது குருவினிடத்தில் அமர்ந்திருந்து குரு முகத்திலிருந்து வரும் வார்த்தைகளை ஹிருதயம் கொடுத்துக் கேள். அது உனது மனச் சலனங்களைத் தீர்த்து மனத் தெளிவைத் தரும்.

9. உனது துன்பங்களை தீர்க்கும் சக்தி உனக்கில்லாமலிருக்கலாம். ஆயினும் அதனை தீர்க்கக் கூடிய ஒரு சக்தி உன்னிடமிருக்கின்றது. அதற்கு உன்னைச் சுயாதீனப்படுத்தினால் காற்றில் பறந்துபோகும் சாம்பல் போன்று துன்பங்களெல்லாம் பறந்துவிடும்.

10. முழு மாணவ சமுதாயத்தையும் நம்முடன் வாழுகின்ற தெய்வமென்று கருதிக் கொண்டால் உயிர் ஐக்கியம் தானாகவே உண்டாகும்.

11. நெஞ்சில் திருக்கை வால் ஏற்றுத் திரிபவர்களிடத்தில் எட்டத்தில் நின்று கொள்.

12. பூமி முழுவதிலும் எவ்வளவோ குப்பை கூழங்கள் மண்டிக் கிடக்கின்றன. அவையெல்லாம் உன்னால் சுத்தஞ் செய்ய முடியுமா? இல்லை. ஆனால் பூமியின் ஒரு பகுதியாகிய உனது முற்றத்தை தினசரி கூட்டிச் சுத்தமாய் வைத்திருக்க முடியும். அதே போன்று உலகத்தவர்களுடைய மனதை உன்னால் சுத்திகரிக்க முடியாவிட்டாலும் உனது சொந்த மனதின் அழுக்காறுகளை நீக்கிச் சுத்தமாய் வைத்திருக்க முடியும்.

13. மனிதருடைய மனக் குற்றங்கள்தான் இவ்வுலக துன்பங்களையெல்லாம் சிருஷ்டிக்கின்றன. ஜனங்கள் மனக் குற்றமற்றவர்களாயிருந்தால் இப்பூவுலகம் உண்மையில் ஒரு பூவுலகமாகவேயிருக்கும்.

14. ஒருவரில் பிசாசுக்கள் இருக்கின்றதா? இல்லையா? என்று தெரிவது எப்பொழுது? அவனுடைய சுயநலத்துக்குப் பங்கம் வரும் பொழுது.

15. ஒரு குடம் பாலில் ஒரு துளி நஞ்சு கலந்தால் பால் முழுவதும் கெட்டு விடுவது போன்று ஒருவர் எவ்வளவு நல்ல குணமுடையவராயிருந்தபோதிலும் ஒரு சிறு கெட்ட குணமிருக்குமானால் மற்றெல்லா நற்குணங்களையும் அது கெடுத்து விடும்.

16. இலவசமாய்ப் பெறுகின்ற எதுவும் உபத்திரவம் தரக்கூடியவை.

17. வறுமை, நோய், அறிவின்மை இவைகளைப் பயன்படுத்திக் காரியம் சாதிப்பது தரங் குறைந்த பண்பற்ற செயல்.

18. கலியுக மனிதர்கள் அதிக மனச் சலனமுடையவராயினும் மிருதுவான குண முடையவர்கள். இவர்களுடைய நித்திய ஜீவிதத்தை ஞான மூலகங்களுடைய பற்றுக் குறையால் பிசாசுக்கள்தான் அதிகம் இடத்தைப் பிடித்திருக்கின்றன.

19. அன்றாடக் கடமைகளைப் பகடைக் காய்களை உருட்டி விளையாடுவது போன்று விளையாடினால் ஜீவிதமும் ஒரு சூது விளையாட்டாகவே முடியும். எனவே கடமைகளை நெறிப்படுத்திப் பொறுப்புணர்ச்சியோடு செய்க.

20. மனிதன் உலகப் புதினங்களைப் பார்ப்பதற்காக எவ்வளவோ துடித்துக் கொண்டிருக்கின்றான். அதற்காகச் செலவழிக்கும் நேரத்தில் மிகச் சிறிய பங்கையாவது தன் தன் மனதில்நிகழ்ந்து கொண்டிருக்கும் புதினங்களைப் பார்ப்பதற்குச் செலவு செய்தால் பாவத்தைத் தீர்ப்பதற்கான ஞானம் பிறப்பதற்கு வழிதோன்றும்.

21. இணங்காத ஐந்துக்களையும் தடவக் கூடிய இடத்தில் தடவிக் கொடுத்தால் அது இணங்கி நிற்பது போன்று, விலங்கு மனத்தையும் தடவக் கூடிய இடமறிந்து தடவிக் கொடுத்தால் அதுவும் இணங்கி நிற்கும்.

22. மனம்: வேஷத்திற்குரிய இலட்சியத்தைப் பொருந்தாதவர்களுடைய வேஷமே பொய் வேஷம்.

23. சித்து; வித்தை; ஜாலம் இம் மூன்றும் கோணத்திலிருப்பவை. வித்தைகள்; மருந்து; தேவதா உபாசனைகளால் நிகழ்த்துபவை. ஜாலம் கையடக்கம் மெய்பக்கத்தால் செய்பவை. இவைகள் வெறும் விநோதங்களே தவிரக் கடவுட் காரியமல்ல. சித்து என்பது முற்றிய ஞானிகளிடத்திலிருந்து சந்தர்ப்பானுசரணம் இயற்கையாகவே நிகழ்ந்து கொண்டிருப்பவை.

24. நமது ஊனக் கண் பார்வைக்கு எட்டாத நட்சத்திர மண்டலங்கள் இருக்கின்றன. விஞ்ஞானிகளுடைய ஊனக் கண்களுக்கும் அவை புலனாவதில்லை.

ஆயினும் விஞ்ஞானி அவைகளைப் பார்த்தறியக் கூடிய தூரதர்சனிக் கருவிகளினால் அம் மண்டலங்களைப் பார்த்தறிகின்றான். ஞானியோ தூரவெளியைத் தாண்டி நிற்கும் ஞானம் என்ற தனது தூரதர்சனியால் கட்புலனாகாத இறைவனையும் பார்க்கின்றான்.

25. சர்க்கரையில் குழைத்து வைத்த எட்டிக் கொட்டையின் கசப்பு பல்லாண்டுகள் சென்றாலும் கசப்பு கசப்பாயிருப்பதைப் போன்று எண்ணற்ற எண்ணக் கும்பலில் புதைந்து கிடக்கும் மனதை மடக்கியெடுத்துத் தன் நிலைப்படுத்தாதவர்களுடைய வாழ்க்கை எட்டிக் கொட்டையைப் போன்று கடும் கசப்பாகவேயிருக்கும்.

26. பசுப்பால் தாது விருத்திக்குரிய நல்லுணவாயினும் வயிற்று வலிக்காரனுக்கு அது தீங்கை விளைவிக்கும். நல்லுபதேசங்களையும் அவர் அவருடைய பக்குவதிற்கேற்பக் கொடுக்காவிட்டால் விபரீத பலன் விளையும்.

27. புனிதமான கெங்கா நதியில் மூழ்கிக் கிடக்கின்ற பிராணிகளுக்கு ஞானம் வந்து மோட்சங் கிடைக்கின்றதா? இல்லை. அதே போன்று ஞான சாதனை ஏதுமின்றி ஞான விஷயங்களைக் கேட்பதிலும் வாசிப்பதிலும் மூழ்கிக் கிடக்கின்றவர்கள் எவ்வாறு ஞானிகளாவர்.

28. பிள்ளைகள் நல்லவர்களாய் வளர வேண்டுமென்று பெற்றோர்கள் எண்ணினால் பெற்றோர்கள் நல்லவர்களாய் வாழவேண்டும்.

29. ஒருவர் எண்ணி வந்த எண்ணங்களின் பிரதி ரூபந்தான் அவருடைய சூக்கும சரீர வடிவம்.

30. அன்பும் ஐக்கியமும் உடையவராயிருக்குக. எனினும் அதற்காகத் தன் நெறி தவறாமல் இருப்பவரே நெறியாளர்.

31. ஹிருதய சுத்தி; இதுதான் ஜீவித சாரம். இதைப் பெற்றவர்கள் கற்பக விருட்சத்தின் கீழ் இருப்பவர்கள்.

32. குறியில்லாமல் அம்பெய்தால் எய்த அம்பால் ஆபத்துக்களே விளையும். இவ்வாறானதுதான் ஒரு சிறந்த குறிக்கோளில்லாத வாழ்க்கையும். மனிதன் ஒரு உயர்ந்த இலட்சியத்துடன் வாழ வேண்டும். அன்றாடக் கடமைகளை இலட்சியத்தில் பொருந்தும் வண்ணம் செய்து கடமையின் பலாபலனாகிய இன்ப துன்பங்களை இலட்சியத்துக்காகச் சமர்ப்பணம் பண்ண வேண்டும். இவ்விதம் வாழுகின்றவன் சீரிய குறிக்கோளை அடைந்த ஒரு பெருமகனுக்குரிய சுகத்தை அனுபவிக்கின்றான். ஞானம்; இதுதான் இலட்சியங்களில் சிறந்தது. ஜீவித தர்மங்கள் இந்த இலட்சியத்துடன் இணையாவிட்டால்வாழ்க்கையின் அச்சாணி உடையும். ஜீவாதாரத் தேவை

களில் தன்னிறைவெய்திருற்கூட மனிதன் அதில் திருப்திப்படுவதில்லை. அதற்கப்பால் ஒரு இருதய தாகம் இருக்கின்றது. மனிதருடைய மன வேட்கைக்கு முடிவு காணும் அந்த அந்தரங்க ஆத்மீக மூல உணர்வுகளை மனித சமுதாயம்புறக்கணிக்கும்போது நீர் வற்றிவரண்டு போன குளத்தை விட்டு நீர்ப்பறவைகள் பறந்து செல்வது போன்று அமைதியும் சுகமும் உலகத்தை விட்டுப் பறந்து செல்கின்றன.

33. தலைமயிர் தலையில் இருக்கும் வரையில் தலைக்குப் பாதுகாப்பும் அழகுங் கொடுக்கின்ற பொருளாகவேயிருக்கின்றது. அது உண்ணும்உணவில் இருக்குமாகில் வாந்தியும் சத்தியும் வரப் பார்க்கும். அதே போன்று ஒவ்வொன்றும் அதனுடைய ஸ்தானத்திலிருக்காவிட்டால் அவைகளுடைய மதிப்பும் மரியாதையும் குறைந்து விடும். அவ்வாறே மனிதனுடைய நிலையும்.

34. மனச் சங்கற்பம் நல்லதாயிருந்தால் கர்மமும் நல்லதாயிருக்கும்.

35. சந்திரனைச் சுற்றிப் பரிவட்டந் தோன்றினல் அது மழைக்குரிய அறிகுறியாயிருப்பது போன்று ஹிருதயத்தைச் சுற்றி நல்லுணர்

வலைகளின் பரிவட்டம் தோன்றினால் அது இறையருள் பொழியப் போவதன் அறிகுறி. பரிவட்டம் நெருங்கி நின்றால் உடன் மழையும், தூரமாயிருந்தால் தாமதமாகவும் பொழியும். திருவருளும் அதே போன்றதென அறிக.

36. தொட்டாற் சுருங்கிச் செடியைத் தொட்டால் அதன் இலைகள் சுருங்கி விடும். சுருங்கிய இலைகள் உடனே நிமிருமாகில் மழையும் விரைவாகப் பெய்யப் போகின்றதென ஊகிக்கலாம். வரும் துன்பங்களையும் உடனுக்குடன் மறந்து மனந் தெளிவடைகின்றவர்களை நோக்கி ஐஸ்வரிய தேவதையும் விரைவாக வந்து கொண்டிருக்கின்றதென்பதையும் அறிக.

37. சமயத்தை ஜால வித்தைகளின் விளையாட்டரங்கமாய் மாற்றுகின்றவர்கள் கடவுளைக் கேலியும் கிண்டலும் செய்வதாகவே முடியும். சித்துக்கும் ஜாலத்திற்கும் வித்தியாசம் தெரியாத பாமர பக்த ஜனங்கள் கண்கட்டு வித்தைகளைக் காட்டிச் சித்தர் போல் நடித்துத் திரிபவர்களிடம் விழிப்பாயிருக்கவும்.

38. அணுப் பிரமாணமான துரும்பிலிருந்து எண்ணற்ற ஜடப் பொருள்களின் வழியாகப் படிப்

படியாய் வளர்ந்து வந்த மாமலை போன்ற ஒரு உணர்வு மலைதான் மனிதரிலிருக்கும் மனம். அதனை ஒரே நாளில் தகர்த்தெறிய முடியாது. ஆத்மீக மார்க்கத்தில் நீண்ட காலம் தளராமல் முயற்சிக்க வேண்டும்.

39. பலவற்றையும் கற்றறிகின்ற மனிதர் வாழ்க்கையைப் பற்றி அறிவதில்லை. அதையறியாதவர்கள் செம்மையாய் வாழ்வதெப்படி?

40. அறுசுவை உணவுகளில் பாகற்காய் போன்ற கசப்புப் பதார்த்தங்களையும் ருசியாக உண்ணப் பழகிய மனிதன் தனது வாழ்க்கையில் வரும் கசப்பான காரியங்களையும் ருசியுடன் ஏற்கப் பழகினால் வாழ்க்கையில் துன்பமென்பதே இராதல்லவா?

41. கோளங்களைச் சிருஷ்டித்த கடவுளுக்கு கோள்களிலிருந்து வரும் தாக்கங்களையும் தீர்க்க முடியாமலாபோகும்?